### மதுரை மேற்கு தொகுதி எம்.ஜி.ஆரின் கோட்டை , அ.தி.மு.க.வின் கோட்டை:

# இதை யாராலும் அசைக்க முடியாது; 2026-ல் மீண்டும் எடப்பாடியார் தலைமையில் அம்மாவின் ஆட்சி அமையும்

### முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. பேச்சு



**மதுரை, ஜூலை 16-**

மதுரை மேற்குத் தொகுதி எம்.ஜி.ஆரின் கோட்டை ,அ.தி.மு.க.வின் கோட்டை இதை யாராலும் அசைக்க முடியாது 2026 ல் மீண்டும் அம்மாவின் ஆட்சி எடப்பாடியார் தலைமையில் அமையும் என்று முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

மதுரை மாநகர் மேற்கு 1-ம் பகுதி 83 வது வார்டு அதிமுக சார்பில் வட்டச் செயலாளர் எம். பால்பாண்டி தலைமையிலும், பகுதி செயலாளர் எஸ்.எம்.டி. ரவி முன்னிலையிலும் சோலை அழகுபுரத்தில் நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம். எஸ்.பாண்டியன், ஆர். அண்ணாதுரை, பா. குமார்,பரவை ராஜா, திரவியம், வி.பி.ஆர்.செல்வகுமார், சுகந்தி அசோக், ஏ.பார்த்திபன், பேராசிரியர் ஜெயபால், ஒட்டுரணி திருமுருகன், பைக்காரா கருப்பசாமி, பகுதி முத்துவேல், ஏ.தங்கப்பாண்டி, அஜய், சண்முகசுந்தரம், பழங்காநத்தம் ராஜாராம், வக்கீல் பாலமுருகன், சி.ஆர்.கதிரவன், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

மதுரை மாநகர் தெற்கு 6-ம் பகுதி 86 வது வார்டு அதிமுக சார்பில் வடக்கு வட்டச் செயலாளர் பி.கர்ணன் பகுதி செயலாளர் எஸ்.டி.ஜெயபாலன் முன்னிலையிலும் சோலை அழகுபுரத்தில் நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார்.இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம். எஸ்.பாண்டியன், ஆர். அண்ணாதுரை, பா. குமார், எஸ்.எஸ்.சரவணன் எம் எல்.ஏ., பரவை ராஜா, திரவியம், பேராசிரியர் ஜெயபால், வி.பி.ஆர்.செல்வகுமார், ஒட்டுரணி திருமுருகன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் மதுரை மாநகர மாவட்ட அ.தி. மு.க.செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. பேசியதாவது-திமுக ஆட்சி பொறுப்பேற்று நான்கரை வருடம் முடியப்போகிறது.அவர்கள் சொன்ன தேர்தல் வாக்குறுதிகளை எதையுமே நிறைவேற்ற முடியவில்லை. நகைக்கடன் தள்ளுபடி என்று சொன்னார்கள் ஆனால் அதை நம்பி நாம் எல்லோரும் வீட்டில் இருந்த நகைகளை எடுத்து பேங்கில் வைத்து விட்டோம். முதல்வர் ஸ்டாலின் சொன்ன வாக்குறுதிகளை நம்பி வைத்து விட்டோம். ஆனால் வைத்த நகைகளை மீண்டும் திமுக வால் மீட்க முடியவில்லை.அம்மாவின் பொற்கால ஆட்சியில் தாலிக்கு தங்கம்,மாணவர்களுக்கு மடிக்கணினி, இலவச சைக்கிள், இலவச பாட புத்தகம், இலவச பஸ் பாஸ், என அனைத்து திட்டங்களையும் கொண்டு வந்து பொதுமக்களின் வாழ்க்கையை தன் வாழ்க்கையாக நினைத்து ஆட்சி செய்தவர் அம்மா அவர்கள்.

அம்மாவின் அடிப்படையில் வந்த கழகப் பொதுச் செயலாளரின எடப்பாடி பழனிச்சாமி விவசாயி குடும்பத்தில் பிறந்த ஒரு விவசாயியாக தமிழக முழுவதும் எழுச்சி பயணமாக வந்து கொண்டிருக்கிறார்.எனவே நீங்கள் எங்களுடைய ஆட்சியில் என்ன குறை இருந்தது.திமுக ஆட்சியில் என்ன செய்து இருக்கிறார்கள் ? என்பதை சற்று நன்று யோசித்துப் பார்த்து மீண்டும் அம்மாவின் ஆட்சி அமைய உங்களுடைய ஆதாரவை எங்களுக்கு தாருங்கள் எப்பொழுதுமே மதுரை மேற்குத் தொகுதி எம்.ஜி.ஆரின் கோட்டை ,அண்ணா திமுக வின் கோட்டை இதை யாராலும் அசைக்க முடியாது 2026 ல் மீண்டும் அம்மாவின் ஆட்சி எடப்பாடியார் தலைமையில் மீண்டும் அமையும் அமையும் அமையும். இவ்வாறு அவர் பேசினார்.

## வாராஹி அம்மன் கோவில் தேய்பிறை பஞ்சமி பூஜை

**நத்தம், ஜூலை 16-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே குட்டூர் அண்ணாமலையார் கோவிலில் அமைந்துள்ள மகா வாராஹி அம்மன் கோவிலில் தேய்பிறை பஞ்சமியை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடந்தது.

இதையொட்டி மகாவாராஹி அம்மனுக்கு திருமஞ்சனம், பால், பழம், சந்தனம், தயிர் உள்ளிட்ட 16 வகையான பொருட்களால் திரவிய அபிஷேகமும்,சிறப்பு அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.இதில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர்.தொடர்ந்து அவர்களுக்கு பிரசாதம் வழங்கபட்டது. இதைப்போலவே கோவில்பட்டி அக்ரஹாரத்தில் பாமாருக்மணி வேணு ராஜகோபாலசுவாமி கோவிலில் உள்பிரகாரத்தில் அமைந்துள்ள வாராஹி அம்மன்,அசோக்நகர் பகவதி அம்மன் கோவிலில் உள்ள வாராஹி அம்மன் கோவில்களிலும் தேய்பிறை பஞ்சமியை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடந்தது. இங்கும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

### ராமநாதபுரம் பள்ளி விழாவில்

## கலெக்டர் - எம்.எல்.ஏ.வை காமராஜர் வேடமணிந்து வரவேற்ற மாணவர்கள்



**ராமநாதபுரம், ஜூலை 16-**

ராமநாதபுரம் வள்ளல் பாரி நகராட்சி நடுநிலைப் பள்ளி மற்றும் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் புதிய கட்டிட திறப்பு விழாவில் காமராஜர் பிறந்த நாளையொட்டி மாணவ மாணவிகள் காமராஜர் வேடமணிந்து கலெக்டர் சிம்ரன் ஜித் சிங்காலோன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் ஆகியோருக்கு மலர் கொடுத்து வரவேற்பு அளித்தனர்.

ராமநாதபுரத்தில் வள்ளல் பாரி நகராட்சி நடுநிலைப் பள்ளி மற்றும் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.155 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 11 கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் முன்னிலை வகித்தார். மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜித் சிங் காலோன் தலைமையேற்று புதிதாக கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டடங்களை திறந்து வைத்தார்கள். முன்னதாக ராமநாதபுரம் வள்ளல்பாரி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் இன்று பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 123-வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் ஆகியோரை பள்ளி மாணவ, மாணவிகள் பெருந்தலைவர் காமராஜர் உருவத்தில் மாறுவேடமிட்டு, மலர் கொடுத்து வரவேற்றனர்.

அதனைத்தொடர்ந்து பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட கலெக்டர் மற்றும் ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் இனிப்புகள் வழங்கி பாராட்டினார்கள். இந்நிகழ்ச்சியில் ராமநாதபுரம் நகர் மன்றத்தலைவர் ஆர்.கே.கார்மேகம், ராமநாதபுரம் நகர் மன்ற துணைத்தலைவர் டி.ஆர்.பிரவீன் தங்கம், ராமநாதபுரம் நகராட்சி ஆணையர் அஜிதா பர்வின், நகராட்சி பொறியாளர் பாண்டீஸ்வரி மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பரமக்குடியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



**பரமக்குடி, ஜூலை 16-**

தமிழ்நாடு முழுவதும் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் பத்தாயிரம் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன இத்திட்டத்தின் மூலம் மனுக்கள் 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும் அந்த வகையில் பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கிழக்கு ஒன்றியம் பாம்பூர் சமுதாய கூடத்தில் நடைபெற்றது. ஊரகப் பகுதிகளில் 15 துறைகள் 46 சேவைகள் கொண்ட உங்களுடன் ஸ்டாலின் எனும் முகாமை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பரமக்குடி வட்டாட்சியர் வரதன், பரமக்குடி வட்டார வளர்ச்சி அலுவலர் முத்துராமலிங்கம், பரமக்குடி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஜெயக்குமார், கிளைக் செயலாளர்கள் ஆறுமுகம்,ராமசாமி, ஜெயச்சந்திரன் மற்றும் பரமக்குடி கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அந்தோணி தாஸ் மற்றும் நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## நத்திங் போன் (3), நத்திங் ஹெட்போன் (1) இப்போது இந்தியாவில் அறிமுகம்

**சென்னை, ஜூலை 16-**

லண்டனை தலைமையிடமாகக் கொண்ட நொத்திங் நிறுவனம், அதன் முதல் ஃபிளாக்ஷிப் ஸ்மார்ட்போனான நத்திங் போன் (3) மற்றும் முதல் ஓவர்-இயர் ஹெட்ஃபோனான நத்திங் ஹெட்போன் (1) ஆகியவற்றை இந்தியாவில் ஜூலை 15, 2025 முதல் விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இவை பிளிப்கார்ட், மைந்த்ரா, விஜய்சேல்ஸ், குரோமாஉள்ளிட்ட முன்னணி சில்லறை கடைகள் மற்றும் ஆன்லைன் தளங்களில் கிடைக்கின்றன. நத்திங் போன் (3), 6.67 அமோல்டு திரை, ஸ்னாப்டிராகன்® 8எஸ் ஜென் 4 சிப்செட், தொழில்முறை தரத்தில் 50எம்பி டிரிபிள் கேமரா மற்றும் சினிமாட்டிக் 4கே வீடியோ பதிவு போன்ற அம்சங்களுடன் வருகிறது. கிளிஃப் மேட்ரிக்ஸ், ட்ரை-கொலம் மற்றும் மேம்பட்ட வடிவமைப்புகள் இதனை வித்தியாசமாக்குகின்றன. விலை ரூ.62,999 (12ஜிபி+256ஜிபி) மற்றும் ரூ. 72,999 (16ஜிபி+512ஜிபி) ஆகும்.வங்கி சலுகைகள் மற்றும் எக்ஸ்சேஞ்ச் ஆப்ஷன்கள் வழங்கப்படுகின்றன.

நத்திங் ஹெட்போன் (1), பிரபல ஆடியோ பிராண்டான கேஇஎப் உடன் கூட்டு தயாரிப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.40எம்எம் டைனமிக் டிரைவர், ஹை-ரெஸ்லூஷன் ஆடியோ, ரியல்-டைம் ஸ்பேஷியல் ஆடியோ மற்றும் ஏஎன்சி ஆகியவை இணைந்து சிறந்த கேட்கும் அனுபவத்தை வழங்குகின்றன. விலை ரூ.21,999, ஜூலை 15 அன்று மட்டும் ரூ.19,999 என சிறப்பு அறிமுக விலையில் கிடைக்கிறது. இத்தகவல்கள் மற்றும் கூடுதல் விவரங்கள் நத்திங் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான நத்திங்.டெக் மற்றும் அதன் சமூக ஊடக பக்கங்களில் (இன்ஸ்டாகிராம்/எக்ஸ்) பெறலாம்.

## பெரிய பேட்டரி. ப்ரோ கேமரா உடன் 217 கிராம் மட்டுமே எடை கொண்ட விவோ எக்ஸ் ஃபோல்ட் 5 அறிமுகம்

**சென்னை, ஜூலை 16-**

புதுமையான உலகளாவிய ஸ்மார்ட்போன் பிராண்டான விவோ, இன்று அதன் மிகவும் மேம்பட்ட மடிக்கக்கூடிய ஸ்மார்ட்போனான விவோ எக்ஸ் ஃபோல்ட்5ஐ அறிமுகப்படுத்தியது. முதன்மை செயல்திறன், பிரீமியம் கைவினைத்திறன் மற்றும் ஏஐ இயங்கும் உற்பத்தித்திறன் ஆகியவற்றை இணைத்து, எக்ஸ் ஃபோல்ட்5 ஒரு மடிக்கக்கூடியது என்ன என்பதை மறுவரையறை செய்கிறது.பெரும்பாலான பாரம்பரிய ஃபிளாக்ஷிப்களை விட இலகுவானது வெறும் எக்ஸ் ஃபோல்ட்5 இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் பிரகாசமான டிஸ்ப்ளேவை கொண்டுள்ளது, இது ஒரு மடிப்பில் 4500 நைட்ஸ் உச்ச பிரகாசத்துடன் உள்ளது. நீண்ட ஆயுள் மற்றும் மீள்தன்மைக்காக உருவாக்கப்பட்ட இது, நீர், தூசி மற்றும் -20°சி வரையிலான மிகக் குறைந்த குளிர் வெப்பநிலைகளுக்கு எதிராக ஐபிஎக்ஸ்8, ஐபிஎக்ஸ்9, ஐபிஎக்ஸ்9+ மற்றும் ஐபி5எக்ஸ் எதிர்ப்பு உள்ளிட்ட மூன்று பாதுகாப்பை வழங்குகிறது.

எக்ஸ் ஃபோல்ட்5 ஆனது இந்தியாவின் மிகப்பெரிய மடிப்பு பேட்டரியான 6000எம்ஏஎச் பேட்டரியால் இயக்கப்படுகிறது. இது இந்தியாவின் வேகமான மடிப்பு சார்ஜிங், 80டபிள்யூ டூயல்-செல் வயர்டு ஃபிளாஷ்சார்ஜ் மற்றும் 40டபிள்யூ வயர்லெஸ் ஃபாஸ்ட் சார்ஜிங் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. சக்திவாய்ந்த பயனர்களுக்காக வடிவமைக்கப்பட்ட எக்ஸ் ஃபோல்ட்5, பல்பணி, தகவல் தொடர்பு மற்றும் உள்ளடக்க உருவாக்கத்தை மேம்படுத்தி, வேலை மற்றும் படைப்பாற்றலை முன்னெப்போதையும் விட தடையற்றதாக மாற்றும் ஏஐ இயக்கப்படும் உற்பத்தித்திறன் கருவிகளின் தொகுப்பை அறிமுகப்படுத்துகிறது.

## அபாயகரமான பணிச்சூழலுக்கான ரோபோடிக்ஸ் வளர்ச்சிக்காக யூனிபோஸ் ரூ.5.5 கோடி முதலீடு பெற்றது

**சென்னை, ஜூலை 16-**

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட யூனிபோஸ் டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட், ஒரு டீப்-டெக் ரோபோடிக்ஸ் நிறுவனம், மிகவும் குறுகலான, தீ அபாயம் உள்ள, ஆபத்தான தொழிற்சாலை சூழல்களில் பயன்படுத்தப்படும் ரோபோக்களை உருவாக்க ரூ.5.5 கோடி முதலீட்டை பெற்றுள்ளது.இந்த முதலீட்டு ஓ2 ஏஞ்சல்ஸ் ஐஎன் 44 கேபிடல், மற்றும் பிற முதலீட்டாளர்களும் இதில் பங்கேற்றனர். இதற்கு முந்தைய கட்டமாக, ஸ்டார்ட்அப் டிஎன் இல் இருந்து ரூ.2.5 கோடி துவக்க முதலீட்டை பெற்றிருந்தது. இந்த நிறுவத்தின் திடமான தொழில்நுட்பமும், துரித வளர்ச்சிக்கான நம்பிக்கையையும் உறுதிபடுத்துகிறது.இந்த நிறுவனம் மணிகண்டன் தட்சிணாமூர்த்தி,சமயராஜ் துரைராஜ், சக்திவேல் பண்ணீர் செல்வம், மற்றும் வெங்கடேஷ் சுந்தரமூர்த்தி ஆகியோரால் இணைந்து நிறுவப்பட்டது.

இது குறித்து நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரியான மணிகண்டன் தட்சிணாமூர்த்தி கூறுகையில், இந்த புதிய முதலீட்டை கொண்டு, யூனிபோஸ் இந்தியா, ஜிசிசி மற்றும் தென் கிழக்காசியாவில் வணிக வளர்ச்சியை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது. அதே நேரத்தில், ரோபோடிக் பம்ப்கள், செயற்கை நுண்ணறிவின் அடிப்படையிலான ஆய்வு மொடியூல்கள் மற்றும் நேரடி விதிமுறை பின்பற்றும் கருவிகள் மீதான ஆராய்ச்சியும் வளர்ச்சி செயலிகளும் மேம்படுத்தப்படும். எங்கள் என்ஜினியரிங் மற்றும் சேவை குழுவையும் விரிவுபடுத்தி, ஓஇஎம் கூட்டமைப்புகளை உருவாக்கி, உலகளாவிய விற்பனை வாய்ப்புகளை உருவாக்கவுள்ளோம் என்றார். ஓ2 ஏஞ்சல்ஸ்-இன் இணைநிறுவனர் ராஜேஷ் ரஞ்சன் கூறுகையில். யூனிபோஸ் தனது ஆழ்ந்த தொழில்நுட்பத் திறமையாலும், ரோபோடிக்ஸ் தளத்தின் பரவலான பயன்பாடுகளாலும் எங்களை ஈர்த்தது. இந்திய இன்ஜினியரிங் உலகளவில் எதையும் சாதிக்க முடியும் என்பதை இவர்கள் நிரூபிக்கின்றனர் என்று கூறினார்.



**விருதுநகரில் முன்னாள் முதல்வர் காமராஜரின் 123-வது பிறந்த நாளை முன்னிட்டு அமைச்சர்கள் கே.கே.எஸ். எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, காமராஜர் மணிவிழா மண்டபத்தில் அவரது உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அருகில் மாவட்ட கலெக்டர் சுகபுத்திரா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கண்ணன், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன் மற்றும் அரசு அலுவலர்கள் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.**



**திண்டுக்கலில் முன்னாள் முதல்வர் காமராசர் 123-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அவரது சிலைக்கு திண்டுக்கல் மாவட்ட நாடார் பேரவை சார்பாக மங்கை வி.ராஜா தலைமையில் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் நிர்வாகிகள் குரு பாண்டியன் ராமராஜன், ஜான் ஜோசப் மற்றும் பலர் உள்ளனர்**

## அருப்புக்கோட்டைக்கு வருகை தரும் எடப்பாடி பழனிச்சாமிக்கு வரவேற்பு

### அ.தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை

**அருப்புக்கோட்டை, ஜூலை 16-**

அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு வருகிற 8-ம் தேதி முன்னாள் முதல்வரும், அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிச்சாமி வருகை தர உள்ளார்.அவரை சிறப்பாக வரவேற்பது குறித்து ஆலோசனைக் கூட்டம் நெசவாளர் காலனியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு அ.தி.மு.க. கிழக்கு மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன் தலைமை வகித்தார்.




அம்மா பேரவை இணைச் செயலாளர் ராஜவர்மன் , அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளர் சுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர் வீரசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் வகித்தனர். அருப்புக்கோட்டை நகர செயலாளர் சோலை .சேதுபதி ஏற்பாட்டில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் அண்ணா தொழிற்சங்க மண்டல செயலாளர் குரு சந்திரன், மாவட்ட சிறுபான்மை பிரிவு செயலாளர் சேரன் முகமது இஸ்மாயில், நகரப் பொருளாளர் செந்தமிழ் செல்வன், எம்.ஜி.ஆர். மன்ற நகரச் செயலாளர் செல்வேந்திரன், மகளிரணி நகரச் செயலாளர் பிரேமா, அம்மா பேரவை நகரச் செயலாளர் ராமர், சவுண்டையா, வெள்ளக்கோட்டை கலு சிவலிங்கம், தர்மர், அண்டா கலுசு, ராஜப்பன், சிப்ஸ் முருகேசன், சரவணன், முத்துரத்தினம், முருகன், சித்தநாதன்,வீரமணி, மாரிமுத்து, பந்தா பாண்டியன், லெனின், சண்முகவேல், சீரணி ரமேஷ், தேவராஜ், அன்பு நிதி, அண்டா நாகராஜ், தர்மராஜ், செந்தில்குமார், முத்து கிருஷ்ணன், நாராயணசாமி, ஈஸ்வரன், சவுண்டப்பன், பிரேமசுதா, சரவணகுமார், மாரிமுத்து, எட்டப்பன், ராஜசேகர், ஆறுமுகம், நெல்சன் சுரேஷ் பால், விஜய் மல்லர், சிவசுப்பிரமணியன், பாண்டியராஜன், தினகரன்,சோலை ராஜ், சொக்கலிங்கம், சின்னச்சாமி, தங்கராஜ் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட பிற அணி நிர்வாகிகள், நகர நிர்வாகிகள், நகரப் பிற அணி நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



**பெருந்தலைவர் கர்மவீரர் காமராஜரின் 123-வது பிறந்த நாளை முன்னிட்டு ராஜபாளையம் நகர் காங்கிரஸ் கமிட்டி சார்பில் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் ரங்கசாமி, நகரத் தலைவர் சங்கர் கணேஷ், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் பொன் சக்தி மோகன், தளவாய் பாண்டியன், சங்கர் கணேஷ், மூத்த நிர்வாகிகள் சிமெண்ட் நாகரத்தினம், கண்ணன், பால்கனி, ரவி ராஜா, வெங்கட்ராமன் மற்றும் நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.**



**பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு யாதவ மகாசபை சார்பாக ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட தலைவர் கே.ஜெயக்குமார் தலைமையில் விளக்குதூணில் உள்ள அவரது உருவசிலைக்கு மாலை அணிந்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் இளைஞர் அணி தலைவர் சீனிவாசன்,பன்னீர்செல்வம், வெங்கடாசலம், வடக்கு மாசி வீதி சீனிவாசன், ஜெனிபர், கண்ணன், மணிகண்டன், வடக்கு தொகுதி இளைஞரணி நரேஷ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.**



● ஐயா இளையபெருமாளின் நூற்றாண்டைப் போற்றும் வகையில் கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டம் லால்புரத்தில் ரூ.5 கோடியே 70 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள எல்.இளையபெருமாளின் திருவுருவச்சிலையுடன் கூடிய நூற்றாண்டு அரங்கத்தை திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். இவ்விழாவில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மு.பெ.சாமிநாதன், சி.வி.கணேசன், தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், பாராளுமன்ற உறுப்பினர்கள் திருமாவளவன், து.ரவிக்குமார், எம்.கே.விஷ்ணுபிரசாத் உள்ளனர்.




● கடலூர் மாவட்டம் சிதம்பரம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராஜரின் 123-வது பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவப்படத்திற்கு நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மு.பெ.சாமிநாதன், சி.வி.கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல்.திருமாவளவன், து.ரவிக்குமார், எம்.கே.விஷ்ணுபிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் கு.செல்வப்பெருந்தகை, சிந்தனைச்செல்வன், தி.வேல்முருகன், சபா.ராஜேந்திரன், கோ.அய்யப்பன் கலந்துகொண்டனர்.



● மயிலாடுதுறை கொள்ளிடம் புறவழிச்சாலையில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவச் சிலையை நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சிவ.வீ.மெய்யநாதன், சி.வி.கணேசன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் நிவேதா எம்.முருகன், பன்னீர்செல்வம், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் தலைவர் ந.கௌதமன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் ஆகியோர் உடனிருந்தனர்.



● பெருந்தலைவர் காமராஜரின் 123-வது பிறந்த நாளை முன்னிட்டு அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரும், முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி அரியலூர் மாவட்டத்தில் பெருந்தலைவர் காமராஜர் உருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



● பெருந்தலைவர் காமராஜரின் 123-ம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் விளக்குதூணில் உள்ள அவரது உருவச்சிலைக்கு முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் அ.தி.மு.க.வினர் மாலையணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாதுரை, பா.குமார், பரவை ராஜா, கு.திரவியம், எம்.எஸ்.கே.மல்லன், சண்முகவள்ளி, வி.பி.ஆர்.செல்வகுமார், எஸ்.டி.ஜெயபாலன், சக்திவிநாயகர்பாண்டியன், கே.கலைச்செல்வம், ஜோசப்தனிஸ்லாஸ், வி.கணேசன், கே.வி.கே.கண்ணன், ஓட்டுரணி திருமுருகன், மார்க்கெட் மார்நாடு, மார்க்கெட் செந்தில்குமார், பஜார் துரைப்பாண்டி, கிராஸ்ரோடு ராதா, கோவில் நெடுஞ்செழியன், புதூர் நாகராஜ், ராணிநல்லுச்சாமி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.


# அம்மையநாயக்கனூர் பேரூராட்சி

## திண்டுக்கல் மாவட்டம்



நாடு போற்றும் நான்காண்டு சாதனை

2021 முதல் 2025 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற திட்டப்பணிகள் விபரம்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | அம்ருத் 2.0 | 10.40 |
| 2 | 15 வது நிதிக்குழு மான்யம் | 375.17 |
| 3 | கலைஞர் நகர்புற திட்டம் | 274.13 |
| 4 | நமக்கு நாமே திட்டம் | 24.87 |
| 5 | தமிழ்நாடு நகர்புற மேம்பாட்டுத்திட்டம் | 119.00 |
| 6 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 | 106.80 |
| 7 | நபார்டு நிதி திட்டம் | 305.30 |
| 8 | நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் | 128.00 |
| 9 | அயோத்தி தாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டம் | 18.00 |
| 10 | சிறப்பு நிதி திட்டம் | 82.00 |
| 11 | டார்மெண்ட் நிதி | 88.86 |
| 12 | மூலதன மான்ய திட்டம் | 122.20 |
| 13 | தேசிய நகர்புற சுகாதார இயக்கம் | 50.00 |



செ.சரவணன் இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல்

திரு.இரா.இராஜா
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திண்டுக்கல் மண்டலம்



திரு. S.P. செல்வராஜ்
தலைவர்

திருமதி. பூங்கொடி முருகு
செயல் அலுவலர்

திரு. நா.விமல் குமார்
துணைத்தலைவர்

வார்டு கவுன்சிலர்கள்

S.மீனாட்சி செல்வராஜ், P.விஜயகுமார், V.கவிதா, M.முத்துலெட்சுமி M.சத்யா, R.காசியம்மாள், ப.கருணாகரன், T.தேவி கா.சந்திரபாண்டியன், S.குணசீலி ஆரோக்கியமேரி, ஜோ.புஷ்பம் மை.முகமது நசீர், சு.செல்வி, மு.ஜெயராஜ், ரா.கவிதா, P.மாரியப்பன்



# VCET
Empowering the Next Generation

Velalar College of Engineering and Technology

25 Years of Academic Excellence 2001-2026

Approved by AICTE, New Delhi | Affiliated to Anna University, Chennai
Accredited by NAAC with 'A+' Grade | Accredited by NBA
Perundurai Road, Thindal, Erode - 638 012. Tamilnadu, India.

**(Autonomous)**

Counselling Code 2723

Admissions Open 2025 - 26 | 99429 07725 98427 34934

NAAC A+ ACCREDITED · AUTONOMOUS STATUS

## PROGRAMMES OFFERED

### UNDER GRADUATE (B.E./B.Tech.)
- Artificial Intelligence & Data Science (Ai & DS)
- Biomedical Engineering
- Civil Engineering
- Computer Science and Engineering
- Computer Science and Engineering (AI & ML)
- Electrical and Electronics Engineering
- Electronics and Communication Engineering
- Mechanical Engineering
- Medical Electronics
- Information Technology

### POST-GRADUATE (M.E.)
- Applied Electronics
- Bio-Medical Engineering
- Computer Science and Engineering

### Master of Business Administration (MBA)

### RESEARCH (Ph.D.)
- Biomedical Engineering
- Electrical and Electronics Engineering
- Electronics and Communication Engineering
- Mechanical Engineering
- Physics | Mathematics

INDIA TODAY
• Ranked 5th for Career Progression and Placement at the State Level

THE WEEK
Ranked 9th among the Best Private Engineering Colleges at the State Level

CAREERS 360
Ranked AAA+ in India's Best Engineering Colleges 2023

competition success review
Best Outstanding College 2023

### Training & Placement Cell
- Excellent placement record connects each student to a meaningful and challenging career opportunity.
- Mock interviews by industrial experts and alumni mentors from reputed companies.
- Skills imparted through training on Communication, Problem Solving, Aptitude, Soft Skills, Interpersonal Skills, Entrepreneurial Skills, Programming Skills, Life Skills, Values & Ethics and 360 Degree Personality Development.
- Company specific training by experts from Corporate.

0424 2244201 - 05
www.velalarengg.ac.in
admission@velalarengg.ac.in
vceterode